ஆவியான எங்கள் தேவனே..உம்மை

அன்போடு அழைக்கிறோம் ஐயா...2

அடியார்கள் எங்களையும் அபிஷேகத்தால்

ஆட்கொண்டு நடத்துவீரய்யா உம்

அன்பினாலே நிரப்புவீரய்யா...2

1 தேற்றிடும் எங்கள் தேற்றரவாளர் நீரே

ஊற்றிடும் எங்கள் மீது அபிஷேகமே...2

மாற்றிடும் எங்கள் மாறா காயங்களை

நீக்கிடும் எங்கள் பலவீனங்களை...2

2 சத்தியத்தை போதிக்கின்ற போதகர் நீரே

சகலத்தை அறிகின்ற ஞானமும் நீரே...2

அற்புதங்கள் செய்திடும் எம் துணயாளரே

அனைத்துக்காய் ஜெபிக்கின்ற ஜெப வீரரே 2

3 ̇ தாயைப்போல தேற்றுகின்ற அன்பு தெய்வமே

தந்தை போல அணைக்கின்ற இன்ப தெய்வமே...2

ஏற்றவேளை உதவுகின்ற அன்பு நண்பரே

இந்த வேளை எங்களுக்காய் உதவிடுமே...2